# மெட்ரோ ரயில் நிலையங்களில் மருத்துவ முகாம்

சென்னை

மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மெட்ரோ ரயில் நிறுவனமும், வாசன் கண் மருத்துவமனையும் இணைந்து வரும் 17-ம் தேதி முதல் 21-ம் தேதி வரையில் இலவச பல், கண் மருத்துவ முகாமை மெட்ரோ ரயில் நிலையங்களில் நடத்தவுள்ளன. இதில், பொதுமக்கள், மெட்ரோ ரயில் ஊழியர்கள் பங்கேற்று பயன்பெறலாம்.

அதன்படி, வரும் 17-ம் தேதி அண்ணாநகர் மெட்ரோ ரயில் நிலையத்திலும், 18-ம் தேதி அண்ணாநகர் டவர், 19-ம் தேதி சைதாப்பேட்டையிலும், 20-ம் தேதி கிண்டியிலும், 21-ம் தேதி விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையத்திலும் இந்த முகாம் நடக்கவுள்ளது.

மேற்கண்ட நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையில் முகாம் நடக்க உள்ளது.